# பண்டைத் தமிழரின் வாழ்வியல் சடங்குகள் – ஒரு பார்வை

***முனைவர் அ. சம்பத்குமார்***
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

***முனைவர் மா. மலர்ச்செல்வி***
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

*பண்டைத் தமிழரின் வாழ்வியல் பல்வேறு சூழல்களைக் கொண்டு அமைந்திருந்தன. அக்கால மக்கள் பழமையான வாழ்விலிருந்து நாகரிகமான வாழ்வைப் பெற்றிருந்தனர். அவர்களிடம் உடைமை சார்ந்த பண்பாட்டு அமைப்புகள் இருந்ததைக் காண முடிகிறது. இன்று வழிவழியாகக் பின்பற்றி வரப்படும் பல்வேறு நம்பிக்கைகள், சடங்குகள் பழங்காலத்திலேயே கடைபிடிக்கப்பட்டு இருந்திருக்கின்றன. அவர்கள் தங்கள் வாழ்க்கையின் நிலைகளைப் பிறப்பு முதல் இறப்பு வரையிலானதாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்ட சடங்குகளைச் செய்திருக்கின்றனர். அதில் பிறப்பு, பூப்பு, திருமணம் (வதுவை), இறப்பு, திருவிழாக்கள் ஆகியன குறிப்பிடத் தக்கனவாக இருக்கின்றன.*

## சடங்குகள்

*மனித வாழ்வில் பல்வேறு நிகழ்வுகளின் போது சடங்குகள் செய்யப்படுகின்றன. அச்சடங்குகள் வழிவழியாகக் கடைபிடிக் கப்பட்டும் மாற்றம் பெற்றும் நிலை பெறுகின்றன. காலந்தோறும் கடைபிடித்து வருவதால் சடங்குகளாகத் தோற்றம் பெறுகின்றன. சங்ககால மக்களிடம் பல்வேறு நம்பிக்கைகள் சடங்குகளாகக் கடைபிடிக்கப் பட்டமையைக்காணமுடிகிறது. அக்காலத்தில் குடும்பத்தைச் சார்ந்தும் வாழ்க்கையைச் சார்ந்தும் பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இவ்வாறான நம்பிக்கைகளைக் கடைபிடிப்பதற்கு வழி வழியிலான நடவடிக்கைகளின் மூலம் பெற்ற அனுபவங்களே காரணமாக அமைகின்றன.*

## பூப்புச் சடங்கு

*பெண்ணின் உடற்கூறு அடிப்படையில் கருவுருதற்குரிய தகுதியை அடைதல் பூப்பு எனப்படுகின்றது. பழங்காலத்தில் பூப்படைதல் நிகழ்வில் பருவமெய்தும் பெண்களைத் தீட்டுக்குரியவர்களாக நடத்தினர். அவர்களை வீட்டிலிருந்து விலக்கி வைத்தனர். பருவமெய்திய பெண்ணின் தன்மையினைப் பற்றிக் கூறும் கயமனாரின் பாடலில் உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்துக் கூறப்படுகின்றது. ‘‘கலம்தொடா மகளிர்’’1 என்ற சொல் பூப்பெய்திய பெண்களைக் குறிப்பதாக அமைகின்றது. அவர்கள் பொருட்களைத் தொடுவது தீட்டாகக் கருதப்படுகின்றது. அவர்கள் கோயில்களுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. பூப்பெய்திய பின் பெண்ணுடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் விளக்கப்படுகின்றது. மேலும் திருமண உறவுகளில் பெண்ணின் பூப்பு கவனங் கொள்ளப்பட்டிருக்கிறதையும் பருவமடையும் பெண் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது. பூப்பின் போது பெண்ணின் உடலில் ஏற்படும் மாற்றங்களை,*

***முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின***
***தலைமுடி சான்ற தண்தழை யுடையை***
***அலமங் ஆயமெ டியாங்கணும் படாஅல்***
***மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய***
***காப்பும் பூண்டிசி னடையும் போகலை***
***பேதைஅல்லை மேதையங் குறுமகள்***
***பெதும்பைப் பருவத் தொதுங்கினை***

***(அகநானூறு, பா.எ.7)***

*என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. மார்பகங்கள் கட்புலனாகும் வகையில் பெரிதாகவும், பற்கள் ஒளி விடவும் கூந்தல் முடித்தலுக்கு ஏற்ப வளர்ந்து விடவும் ஏற்பட்ட மாற்றங்கள் அவள் பருவமெய்தி விட்டாள் என்பதை உணர்த்தும் அறி குறிகளாகக் கூறப்படுகின்றது. அதே வேளையில் அவள் வெளியே செல்லாமல் பெதும்பைப் பருவத்தை அடைந்ததைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமைகின்றது.*

*பூப்பெய்திய பெண்ணை அணங்கு வருத்தும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்ததால் தாய் ஒருத்தி, பருவமடைந்த தன் மகளை வெளியில் எங்கும் செல்லாதே என்றும் வருத்தும் தெய்வம் பற்றும் என்றும் எச்சரிக்கின்றாள். சடங்குகள் செய்து அவள் வீட்டிற்குள் இருக்க வைக்கப்பட்டுள்ளமையைத் தாயின் கூற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. வருத்தும் தெய்வம் பற்றிய அச்ச த்தினை வெளிப்படுத்துவதிலிருந்து அதற்கான சடங்குகளைப் பருவமெய்திய நிலையில் செய்திருக்கின்றனர். புறப்பாடல் ஒன்றும் பருவமெய்திய பெண்ணின் தன்மையை,*

***பாரி பறம்பின் பனிச்சுனை போல***
***காண்டற்கு அரியன் ஆகி மாண்ட***
***பெண்மை நிறைந்த பொலிவொடு, மண்ணிய***
***துகில் விரி கடுப்ப நுடங்கித் தண்ணென***
***அகிலார் நறும்புகை யைதுசென்று அறங்கிய***
***கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு***
***மனைச்செறிந் தனளே வாணுத லினியே***

***(புறநானூறு, பா.எ.337)***

*என்றவாறு உணர்த்துகின்றது. இவ்வாறு பருவமடைந்த பெண்ணை வீட்டினுள் இருத்தி வைத்தல் அக்காலத்து நடைமுறையாக இருந்தமையைக் காணமுடிகிறது.*

**திருமணச் சடங்கு**

*பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் திருமணச் சடங்கு நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இது "வதுவைச்சடங்கு" என்றும் அழைக்கப்படுகிறது. பருவமெய்தியதின் பின் நிகழ்வாக திருமணம் காணப்படுகின்றது. இத்திருமணம் "பெண் கருவுருதல்" என்பது "ஒருவனுக்கே" என்று அதிகாரப்படுத்தும் செயலாக விளங்குகின்றது. நிலவுடைமைச் சமூகத்தின் உடைமையைப் பேணும் வாரிசுரிமையாக இத்திருமணம் மாற்றம் பெறுகின்றது. இக்காரணத்தால் திருமண நிகழ்வானது சடங்காக உருவெடுக்கின்றது. ஒருத்தியை ஒருவனுக்கு உடைமையாக்குவதில் திருமணச் சடங்குகள் பெரும் பங்காற்றின2 என்று சிலம்பு நா.செ ல்வராசு குறிப்பிடுகின்றார்.*

*முதுபெண்டிர் அல்லது குழந்தைகள் பல பெற்றமையால் கோடுகள் விழுந்த வயிற்றை உடைய மகளிர் நால்வர் கூடி, நீரில் நெல்லைக் கலந்து பெண்ணின் தலைவழியே ஊற்றிச் சடங்கினைச் செய்கின்றனர். அவர்கள் அவ்வாறுச் சடங்கு செய்யும் போது கணவன் அன்புடன் பேணும் பண்புடையவளாகவும் கற்பு வழுவாது வாழ வேண்டும் என்றும் தலையில் இதழ்களையுடைய மலர்களைத் தூவினர். நல்ல நாள் பார்த்துத் திருமணச் சடங்கு நிகழ்த்தியதை,*

***வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி***
***புள்ளுப்புணர்ந்து இனிய ஆக தெள்ளொளி***
***அம்கண் இருவிசும்பு விளங்க திங்கட்***
***சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து***
***கடிநகர் புனைந்து கடவுள் பேணி***
***படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ***
***வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்***

***(அகநானூறு, பா.எ.136)***

*என்னும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.*

*சங்க காலத்திய திருமணச் சடங்கு என்பது ஆண், பெண் இருவீட்டாரின் பெரியோர்கள் கலந்துரையாடி முடிவு செய்தபின் நிகழ்வதாக அமைகின்றது. திருமணச்ச டங்கை நிகழ்த்துபவர்கள் பெரியோர்களாக*

இருப்பதையும் காணமுடிகிறது.

**பொம்மல் ஓதி எம்மகள் மணன் என**
**வதுவை அயர்ந்தனர் நமரே**

**(அகநானூறு, பா.எ.221)**

என்ற பாடலடி திருமணச்சடங்கிற்கு முந்தைய நிகழ்வாக மன்றலில் கூடி பேசி முடித்தலை வெளிப்படுத்துகின்றது. திருமணச்சடங்கினை நிகழ்த்தும் போது மகளிர் நெல்லொடு மலர்களைத் தூவுவதும், மணவொலி ஒலிக்க மங்கல நாண் அணிவிப்பதும் யாகம் வளர்த்து வலம்வருவதும் அறியலாகிறது. சங்க இலக்கியத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு முறைகளில் திருமணச் சடங்கு நடைபெற்றதைக் காணமுடிகிறது.

**மகப்பேறு**

பெண்ணின் மகப்பேறு பண்டைக் காலந்தொட்டுச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. ஒரு பெண் தாயானால் தான் சொத்துடைமைச் சமூகமானது வளர்ச்சியை எட்டும் என்றும் வாரிசைப் பெற்றால்தான் அக்குடும்பம் மேலும் தன் தொடர்ச்சியைப் பெறும் என்றும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. மகப்பேறு காலங்களில் பெண்ணிற்குச் சடங்குகள் செய்வது வழக்கமாக இருந்திருக்கின்றது. சங்க இலக்கியத்தில் பிள்ளைப்பேறு உடைமை சார்ந்ததாகக் கூறப்படுகின்றது. கற்புப் பாடல்களில் பேசப்படும் பிள்ளைப் பேற்றுச் சூழல்களில் ஆண்பிள்ளைப் பேறே பேசப்பட்டுள்ளது. பெண் பிறப்புப் பற்றிய செய்தியைப் பேசும் அகப்பாடலையோ புறப்பாடலையோ எங்கும் பார்க்க இயலவில்லை3 என்று பெ.மாதையன் என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார். பிள்ளைப் பேறு உடைமையைப் பேணும் வகையினதாக இருந்தமையால் ஆண் பிள்ளைப் பேறே முதன்மைப்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்பதை அறிய முடிகிறது. திருமண நிகழ்வின் போது மங்கல நீரைத் தெளிக்கும் பெண்களின் வயிறானது பல குழந்தைகளைப் பெற்ற சுவடை உடையது என்பதை,

**புதல்வற் பயந்த தீதலை யவ்வயிற்று**
**வாலிஇழை மகளிர் நால்வர் கூடி**

**(அகநானூறு, பா.எ.86)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. பெண் கருவுருதலைச் சூலுறுதல் என்றும் முதல் கருவுயிர்த்தலைக் கடுஞ்சூல் என்றும் அழைத்ததை,

**முந்நாள் திங்கள் நிறைபொறுத்து அசை**
**ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்**
**கடுஞ்சூல் மகளிர் போல நீர்கொண்டு**

**(குறுந்தொகை, பா.எ.287)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் சுட்டுகின்றன. பெண் கருவுற்றிருக்கும் போது புளிப்பு வேட்கை கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. சூல் கொண்ட பெண்ணை மழை பெய்யும் நிலையிலுள்ள மேகத்திற்கு ஒப்புமையாகக் கூறியுள்ளனர். சூலுற்ற பெண்கள் மண்ணையும் தின்பர் என்பதை,

**வயவுறு மகளிர் வேட்டுஉணி னல்லது**
**புகைவ ருண்ணா வரு மண் ணினையே**

**(புறநானூறு,பா.எ.20)**

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு மகப்பேறு சார்ந்த சடங்குகள் பண்டைக்காலம் முதலாக நடந்துவருவது புலனாகிறது.

**இறப்புச் சடங்குகள்**

ஒருவரது இறப்பின் போது கடைபிடிக்கப்பட்ட சடங்குகள் இறப்புச்சடங்குகள் எனப்படுகின்றன. இச்சடங்குகள் ஈமச்சடங்குகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இறந்த உடலை, புதைத்தல், எரித்தல், எறிந்து விடுதல், தாழியில் இட்டுப் புதைத்தல் போன்ற பல்வேறு முறைகளில் அழித்திருக்கின்றனர். இறப்பின் போது செய்யப்படும் சடங்குகள் குறித்துப் புறப்பாடல்களில் கூறப்பட்டிருக்கின்றன. இறந்த பின் செத்தவர்கள் உடல் தூக்கிச் செல்லப்பட்டு இடுகாட்டிலோ, சுடுகாட்டிலோ வைத்து எரிக்கவும் புதைக்கவும் செய்யப்பட்டிருக்கின்றன. புதைக்கும்

அல்லது எரிக்கும் இடத்திற்குச் செத்தார் சடலம் உறவினரால் தூக்கிச் செல்லப்பட்டது. உடலை அழித்தற்கு முன்பும் பின்பும் அவர்கள் மன்றம் எனப்பட்ட நிழல்தரும் பெரிய மரத்தடியில் சற்று அமர்ந்தனர். பொதுக் காரியத்திற்காகக் கூடினமையின் அது மன்றமாயிற்று4 என்று இறந்தோர் தூக்கிச் செல்லப்படும் இடம், இளைப்பாறும் இடம் ஆகியன குறித்த செய்திகளைத் தருகிறார் ந.சுப்ரமண்யன். இறந்த மன்னர்கள் புதைக்கப்பட்ட தாழிகளையும் மக்கள் அப்போது ஓய்வெடுத்த வன்னி மரங்களையும் கொண்டதாக இடுகாடு காட்சியளிக்கின்றது. இதனை,

**மன்னர் மறைந்த தாழி**
**வன்னி மன்றத்து விளங்கிய காடே**

**(பதிற்றுப்பத்து, பா.எ.44)**

என்னும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. புதைத்தலை வழக்கமாகக் கொண்டிருந்ததை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது. இடுகாடானது கோட்டானின் குரல் கொண்டு அச்சமூட்டுவதாக அமைந்திருப்பதைச் சித்தரிக்கின்றது. பிணத்தைப் புதைக்கும் போது செய்யப்படும் சடங்குகள் குறித்து

**புலைய னேவப் புனமே லமர்ந்து உண்**
**டழல்வாய்ப் புக்க பின்னும்**
**பலர்வாய்த் தீராஅர் பருத்துண் டோரே**

**(புறநானூறு, பா.எ.360)**

என்னும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. பிணத்தைக் கிடத்தி வைத்த பின்னர் புலையன் கள்ளுடன் சோற்றினை அதன் மீது படைத்தும் பின்பு சுட்டெரித்ததைக் கண்டும் சென்றான் என்று குறிப்பிடுகின்றது. சடங்குகள் செய்யப்பட்டப் பின்னரே பிணங்களை புதைக்கவோ, எரிக்கவோ செய்தனர் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

### தீருவிழாச் சடங்குகள்

வழிபடுதலை முன்னிட்டு நடத்தப்பட்ட சடங்குகள் விழாச் சடங்குகள் எனப்படுகின்றன. விழாவும் சடங்குகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகக் காணப்படுகின்றன. சடங்குகளே விழாக்களுக்கு அடிப்படை. சடங்குகளின் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத் தொகுதியினை விழா எனக் கூறலாம். சடங்குகள் வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. விழாக்கள் சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த மந்திரங்களோடும் இயற்கையிகந்த மீவியல் பாற்றல்களோடும் தொடர்புடையனவாகக் காட்சி தருகின்றன5 என்று சடங்குக்கும் விழாவுக்குமான தொடர்பை க.காந்தி வெளிப்படுத்துகிறார்.

சங்க காலத்தில் விழாக்கள் பல கொண்டாடப்பட்டமையையும் அவ்விழாக்கள் சடங்கு நிகழ்வுகளாகக் கருதப்பட்டமையையும் அறிய முடிகின்றது. விழாக்கள் வேனிற் காலத்தில் கொண்டாடப்பட்டன என்பதை

**விசும்புகண் ணழிய வேனில் நீடிக்**

**(அகநானூறு, பா.எ.189)**

என்றஅகநானூற்றுப்பாடல்குறிப்பிடுகின்றது.

**விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்**
**நெய்யுமிழ் சுடரில் கால்பொரச் சில்கி**

**(அகநானூறு, பா.எ.17)**

என்னும் பாடல் அடிகள் விழாக்காலத்தில் விளக்குகள் ஏற்றப்படுவது குறித்துக் கூறுகின்றன. பூந்தொடை விழாக் கொண்டாடப்படுவதையும் அந்நாளில் வீட்டின் முற்றத்தைச் சுத்தம் செய்திருப்பதையும்

**வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்**
**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**
**தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்**

**(அகநானூறு, பா.எ.187)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மழவர்கள் இவ்விழாவினைக் கொண்டாடுவர் என்று கூறுவதிலிருந்து வேட்டையின் நிமித்தம் குறித்துக் கொண்டாடினர் என்பது தெரிய வருகிறது. இவ்விழாவினைக் குறிப்பிட்ட நிகழ்விற்குப் பின் கொண்டாடும் சடங்காகவும் கடைபிடித்தனர். அந்நாளில் வீட்டினைச் சுத்தம் செய்து வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. நாளும் கோளும் பார்த்து

விழாக்கள் கொண்டாடியமையை,

**குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**

**(அகநானூறு, பா.எ.141)**

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகளில் காணமுடிகின்றது. வேளாண்மை முடிந்த தருவாயிலும் ஏர் உழப் போகாத நாளிலும் மக்கள் விழாக்கள் கொண்டாடினர் என்பது தெரியவருகிறது. சிறுமுயலின் மறுபோன்று வானில் தோன்றும் நட்சத்திரங்கள் முழு நிலவு தோன்றும் கார்த்திகை நாளில் தோன்றியும் இருளான வீதிகளில் திருவிளக்குகள் ஏற்றப்பட்டும் மாலைகள் தொங்கவிடப்பட்டும் இருந்தன. இவ்வாறாக ஊர் மக்கள் அனைவரும் கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு விழாக்கள் மக்களால் கொண்டாடப்பட்டன என்பதையும் விழாக்களின் போது சடங்குகள் செய்யப்பட்டன என்பதையும் அறியமுடிகிறது.

சங்க காலப் பண்பாட்டுச் சூழல் என்பது பரந்துபட்டது. சங்ககால மக்கள் தங்கள் வாழ்வியல் சூழலைப் பண்பட்டதாக அமைத்திருந்தனர். அவர்கள் வாழ்வில் சடங்குகள் என்பவை இன்றியமையாத ஒன்றாக இருந்ததைப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் வழி உணர முடிகிறது. இவ்வாறாகப் பண்டைத் தமிழரின் வாழ்வில் சடங்குகள் என்பவை அவர்களின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தன என்பது இதன்வழி புலனாகிறது.

**அடிக் குறிப்புகள்**

1. புறநானூறு, பா.எண். 299
2. சிலம்பு நா.செல்வராசு,தொல்தமிழர் திருமண முறைகள், ப.67
3. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.114
4. ந.சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப.412
5. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.51

**துணை நூற்பட்டியல்**


1. குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, திருத்திய பதிப்பு 2005.
2. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, திருத்திய பதிப்பு 2005
3. புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, திருத்திய பதிப்பு 2005
4. பதிற்றுப்பத்து, உ.வே.சா பதிப்பகம், சென்னை, 1992.